**செய்தி வெளியீடு எண் :1824** **நாள் : 19.10.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்திற்கு உரு கொடுக்கும் வகையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் விளிம்பு நிலை மக்களுக்கான பொருளாதார முன்னேற்றமே சமூக நீதியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கையுடன் 2022–2023–ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

**"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்திடும் பொருட்டு, 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்திட பயிற்சிகள் வழங்கப்படும். சேவை சார்ந்த தொழில்கள் அமைக்கத் தேவையானப் பயிற்சிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் (CIPET). தேசிய நவீன ஆடை வடிவமைப்பு நிறுவனம் (N I F T), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (C L R I), மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் (C F T R I), நெட்டூர் தொழில்நுட்ப பயிற்சி மையம் (N T T F), இந்தியன் இன்ஸ்ட்யூட் ஆப் பேக்கேஜிங் ( I I P ), போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் ரூ.2.50 கோடி செலவில் வழங்கப்படும்".**

2. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் 2022–2023–ஆம் ஆண்டிற்கான அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 2000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் (CIPET). தேசிய நவீன ஆடை வடிவமைப்பு நிறுவனம் (N I F T), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (C L R I), மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் (C F T R I), நெட்டூர் தொழில்நுட்ப பயிற்சி மையம் (N T T F), இந்தியன் இன்ஸ்ட்யூட் ஆப் பேக்கேஜிங் (I I P), போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் ரூ.2,50,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) செலவில் பொருட்கள் உற்பத்தி செய்யும் பயிற்சி மற்றும் சேவை சார்ந்த தொழில்கள் அமைக்க தேவையான பயிற்சியும் அளிக்க நிர்வாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் வழங்கி அரசாணை(நிலை)எண்.86, ஆதி(ம)பந(சிஉதி) துறை, நாள்.27.09.2022–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in